# சூழ்நிலைகள்மூலம் சிட்சித்தல் (கற்பித்தல்)

Transcribed from a message spoken in October, 2012 in Chennai

By *R.S. Milton*

## சிட்சையின் நோக்கம்

தேவனுடைய சுபாவத்துக்கு முரணாக நம்மில் இருக்கிற எல்லாவற்றையும் கீழ்ப்படுத்தி நம்மை அவருடைய சாயலுக்கு ஒத்தசாயலாக்குவதற்கு தேவன் எதையும் விட்டுவைக்க மாட்டார். எனவே, நாம், "ஆண்டவரே, எனக்கு இது வலிக்கிறது; வேதனையாக இருக்கிறது," என்று சொன்னால்கூட தேவன் அதையும் விட்டுவைப்பதில்லை. அப்படியானால் நம் பிதா ஒரு கல்நெஞ்சக்காரர் என்று நாம் நினைத்துவிடக்கூடாது. "எனக்கு வலிக்கிறது, வேதனையாக இருக்கிறது," என்று சொன்னால்கூட எதையும் கண்டுகொள்ளாமல் அவர் அவைகளை என் வாழ்க்கையில் அனுமதிப்பார் என்றால் எபிரெயர் 12:10-11ஆம் வசனங்கள் நமக்குப் பிரயோஜனமாக இருக்கும். "அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்." எவர்கள்? 9ஆம் வசனம் பதில் தருகிறது. நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள். "இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணப்படாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும், அதில் பழகினவர்களுக்கு பிற்காலத்தில் அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்."

## சிட்சை என்றால் பயிற்சி

சிட்சை என்றால் என்னவென்று நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். சிட்சை என்றால் தண்டனை அல்ல. சிட்சை என்றால் பயிற்சி அல்லது கற்பித்தல் என்று பொருள். ஒரு விளையாட்டு வீரனை எப்படி coach பண்ணுகிறார்களோ அல்லது கடினமான ஒரு போட்டித் தேர்வுக்கு எப்படி coach பண்ணுகிறார்களோ, அப்படி coach பண்ணுவதுதான் சிட்சை.

இராமையா Institute என்று ஒரு I.I.T Coaching institute ஹைதராபாத்தில் இருப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொரு நாளும் அங்கே கல்வி புகட்டுதல் காலையில் 4 மணிக்கு ஆரம்பிக்கிறதாம். மாலை 4 மணிக்கு அல்ல. 2 வருடங்கள் இந்தக் கல்வி புகட்டுதல் நடைபெறுகிறது. ஒவ்வொரு நாளும் காலையில் 4 மணிக்குப் பயிற்சி. இப்படி 2 வருடங்கள் பயிற்சிபெறுவது சந்தோஷமான விஷயமா அல்லது துக்கமான விஷயமா? 4 மணிக்கு எழுந்திருக்க வேண்டும். 1 நாள் அல்லது 1 வாரம் இல்லை. 2 வருடங்கள். 5 நிமிடங்கள் வகுப்புக்குத் தாமதமாகச் சென்றால் அன்றைக்கு வகுப்பில் பங்குபெற முடியாது. மிகவும் கண்டிப்பான பயிற்சி. பயிற்சி எவ்வளவு கண்டிப்பாக, கடுமையாக இருக்கும் என்பது எந்த நோக்கத்திற்காகப் பயிற்சி கொடுக்கப்படுகிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. பொருளாதாரத்தில் ஒரு பட்டம் பெறுவதற்காக நாம் அந்த அளவுக்குக் கடுமையான பயிற்சி பெற வேண்டிய தேவையில்லை. ஆனால், I.I.Tயில் நுழைவதற்குக் கடுமையான பயிற்சி தேவைப்படுகிறது. ஏனென்றால், 10000 பேரில் ஒருவனுக்குத்தான் இடம் கிடைக்கக்கூடும். இந்த விகிதத்தில்தான் இடம் கிடைக்கக்கூடும்.

எனவே, பயிற்சி அல்லது சிட்சை எவ்வளவு கடினமாக இருக்கும் என்பது நோக்கம் அல்லது குறிக்கோள் என்ன என்பதைப் பொறுத்தது. நோக்கம் உயர உயர பயிற்சியின் தரமும், கடினத் தன்மையும் உயர்ந்துதான் ஆக வேண்டும். மாவட்ட அளவில் பங்கு பெற ஒருவிதமான பயிற்சி தேவைப்படுகிறது. மாநில அளவில் பங்குபெற இன்னொரு விதமான பயிற்சி தேவைப்படுகிறது; அது இன்னும் கொஞ்சம் கடினமாக இருக்கும். தேசீய அளவில் பங்குபெற வேண்டுமானால் பயிற்சி அதைவிட இன்னும் கொஞ்சம் கடினமாக இருக்கும். ஒலிம்பிக்கில் பங்குபெற வேண்டுமானால் பயிற்சி பெறுகிறவன் சரியான நேரத்திற்கு வரவில்லையென்றால் பயிற்சியாளர் நிச்சயமாக விடமாட்டார்.

கிரிக்கெட் விளையாடுவதற்காக Madras Christian Collegeக்கு வரக்கூடிய ஒரு கூட்டம் வாலிபர்களை நான் பார்த்திருக்கிறேன். நான் அவர்களைப் பார்த்துக்கொண்டேயிருந்தேன். முதல் ஒரு மணிநேரத்திற்கு அவர்கள் கிரிக்கெட் விளையாடவேயில்லை. அந்தப் பயிற்சியாளர் விளையாட்டு வீரர்களை ஓடச் சொன்னார், குதிக்கச் சொன்னார், என்னென்னவோ செய்யச் சொன்னார். ஆனால், நான் அங்கே இருந்த 45 நிமிடத்தில் ஒரு பந்துகூட வீசப்படவில்லை.

## பரிசுத்தத்தில் பங்குபெற

தேவனுடைய நோக்கம் என்னவென்று அந்த 10ஆம் வசனம் கூறுகிறது. அது என்ன? அவருடைய பரிசுத்தத்தில் பங்குபெற வேண்டும். நம்மை அறநெறி மனிதர்களாக, நல்லொழுக்கமுள்ள மனிதர்களாக மாற்றுவதல்ல அவருடைய நோக்கம். நம்மைப் பரிசுத்தமுள்ளவர்களாக மாற்றுவதுகூட இல்லை. எப்படி எழுதியிருக்கிறது? *அவருடைய பரிசுத்தத்தில் பங்குபெறும்படிக்கு* என்று எழுதப்பட்டிருக்கிறது. இது நல்ல வார்த்தை. நம்மைப் பரிசுத்தமுள்ளவர்களாக மாற்றுவது என்பது ஒன்று. நம்மை அவருடைய பரிசுத்தத்தில் பங்குள்ளவர்களாக்குவது என்பது வேறொன்று.

இன்னொரு வசனம் *2 பேதுரு 1:4*: “அவருடைய திவ்ய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு.” நாம் தேவனுடைய ஜீவனைப் பெற்றிருக்கிறோம். ஆகவே, நாம் தேவனுடைய சுபாவத்தையும் பெற்றிருக்கிறோம். தேவனுடைய சுபாவம் எங்குதான் இருக்கிறது? தேவனுடைய சுபாவம் தேவனுடைய ஜீவனில்தான் இருக்கிறது.

## பரிசுத்த ஆவியால் நடத்தப்படுதல்

ஒரு சகோதரன் இப்படிச் சொன்னார்: **பிள்ளைகளிடத்தில் அவர்களுடைய தகப்பனுடைய சுபாவம் இருக்கிறது. ஆனால், மகன்களிடத்தில் அவர்களுடைய தகப்பனின் குணம் இருக்கிறது**. சுபாவத்துக்கும், குணத்துக்கும் என்ன வித்தியாசம்? ஒரு பறவைக்கு பறக்கிற சுபாவம் இருக்கிறது. ஒரு குருவிக்கு இறக்கை முளைத்ததும் தாய்க்குருவி அதற்குப் பறக்கக் கற்றுக்கொடுக்கிறது. கழுகுகள் கூட தங்கள் குஞ்சுகளுக்குப் பறக்கக் கற்றுக்கொடுக்கின்றன. பறப்பது அதன் சுபாவம். ஆனால், ஒரு கழுகுக் குஞ்சு பறப்பதற்கும் வளர்ந்த ஒரு கழுகு பறப்பதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. வளர்ந்த கழுகு பறப்பது மிகவும் கம்பீரமாக இருக்கும். அது கஷ்டப்பட்டுப் பறப்பதுபோல் இருக்காது. அது ஏதோ மிதந்து கொண்டிருப்பதைப்போல் இருக்கும். நாம் கழுகு பறப்பதைப் பார்த்திருப்போம். அது கோழிக்குஞ்சைக் கொத்தித் தூக்கும்போதுகூட அப்படியே சர்ர்ர்ன்ன்னு கீழே இறங்கி வந்து இலாவகமாகத் தூக்கிச்செல்லும். பறக்கிற சுபாவம் கழுகுக் குஞ்சுக்கு இருக்கிறது. ஆனால், பறக்கிற குணம் வளர்ந்த கழுகுக்குத்தான் இருக்கிறது. Children have the father’s nature but sons have the father’s character.

தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்குள் அவர் தம் சுபாவத்தை வைத்திருக்கிறார். அவருடைய சுபாவம் நமக்குள் இருப்பதால்தான், பாவம் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை வரும்போது அல்லது பாவம் செய்வதற்கான சோதனை வரும்போது உள்ளாக ஓர் எதிர்ப்பு தோன்றுகிறது, உள்ளான ஓர் அசௌகரியம். “இல்லை, நான் இருக்க வேண்டிய இடம் இதுவல்ல, நான் பேச வேண்டிய வார்த்தை இதுவல்ல. நான் செய்ய வேண்டிய காரியம் இதுவல்ல. என்னுடைய எண்ணம் இப்படி இருக்கக்கூடாது. என்னுடைய விருப்பம், உணர்ச்சி இப்படி இருக்கக்கூடாது,” என்று ஓர் அசௌகரியம் நமக்குள் வருகிறதல்லவா? இது எதைக் காட்டுகிறது? நமக்குள் தேவனுடைய சுபாவம் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. பாவம் செய்தபிறகு ஓர் அசௌகரியம் வருகிறதல்லவா? இதுகூட எங்கிருந்துதான் வருகிறது? தேவனுடைய சுபாவம் நமக்குள் இருப்பதால்தான். பாவம் செய்வது கொடூரம். ஆனால், பாவம் செய்தபிறகு ஓர் அசௌகரியமான உணர்ச்சி நமக்குள் எழுகிறது என்பதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

வீட்டில் ஏதோ ஒரு காரியம் அழுகிவிட்டது என்பது துக்ககரமான காரியம்தான். ஆனால், அழுகின பொருட்களை வீட்டில் வைத்துக்கொண்டு எந்தவொரு உணர்ச்சியுமே இல்லாமல் அதன் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பது எவ்வளவு துக்ககரமானது. கொஞ்ச நாட்களுக்குமுன் எங்கள் வீட்டில் ஓர் எலி மோட்டாருக்குள் மாட்டிக்கொண்டது. அந்த மோட்டார் சமையலறையில் இருக்கிறது. மூன்றுபேர் சேர்ந்து அழுகின எலியை அந்த மோட்டாருக்குள்ளிருந்து வெளியே எடுக்க பட்டபாடு இருக்கிறதே! “சில சமயங்களில் எலிகள் சிக்கத்தான் செய்யும். அதனால் என்ன?” என்று நாம் இருந்து விடுவதில்லை. எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு அந்த மோட்டாரைச் சுத்தம் செய்துதான் ஆக வேண்டும்.

அதுபோல, நாம் ஒருவேளை ஒரு பாவத்தில் விழக்கூடும். அதன் விளைவாக அங்கு ஓர் உணர்வு வருகிறதல்லவா? “ஆ! நான் பாவம் செய்துவிட்டேன்!” இது தேவனுடைய சுபாவத்தின் விளைவு. நம் தேவனாகிய பிதாவினுடைய நோக்கம் தம்முடைய சுபாவத்தை நமக்குள் வைப்பது மட்டும் இல்லை. தேவனுடைய குணத்தையே உண்டாக்குவது.

ரோமர் *8:14*யை நாம் வாசிக்கலாம்: “மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.” புத்திரர்கள் என்றால் குமாரர்கள். தேவ

னுடைய பிள்ளைகள் எல்லாருக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். ஆனால், தேவ னுடைய குமாரர்கள் பரிசுத்த ஆவியினாலே நடத்தப்படுகிறார்கள். இதன் பொருள் அவர் கொஞ்சப் பேரை மட்டும் நடத்துவார், மற்றப் பேர்களை நடத்தமாட்டார் என்பதல்ல. அவர் எல்லாரையும் நடத்துவதற்காகத்தான் நமக்குள் வந்திருக்கிறார். அவர் நடத்துகிறார். ஆனால், பல சமயங்களில் நாம் அவருடைய நடத்துதலைப் பின்பற்றுவதில்லை. அவர் உத்தமமாக நடத்துகிறார். தொடர்ந்து கொஞ்ச நாட்கள் நாம் அவரைப் பின்பற்றவில்லையென்றால், அவர் நம்மை நடத்துவதுகூட நமக்குத் தெரியாது. அதற்கு நமக்கு ஒருமுகம் வேண்டும். மழைக் காலத்தில் FM ரேடியோ கேட்பதுபோல. சத்தம் எப்படி கேட்கும்? கரகரவென்று கேட்கும்; இடையிடையே இரண்டு மூன்று ஆங்கில வார்த் தைகள் கேட்கும்; மீண்டும் கரகரவென்று கேட்கும். தேவன் நம்மிடம் பேசுவார், ஆவியானவர் நம்மை நடத்துவார், ஆனால் நமக்குக் கரகரவென்று கேட்கும்.

ஆவியானவர் தேவனுடைய எல்லாப் பிள்ளைகளுக்குள்ளும் இருக்கிறார். ஆனால், ஆவியான வருடைய நடத்துதலை தேவனுடைய குமாரர்கள் மட்டும்தான் பின்பற்றுகிறார்கள். நம்மைப் பிள்ளை களாகவே வைத்திருப்பது தேவனுடைய நோக்கம் இல்லை. நம்மை யாராக வளர்க்க விரும்புகிறார்? நம்மைக் குமாரர்களாக வளர்க்க விரும்புகிறார். குமாரர்களும், குமாரத்திகளுமாக்க. குமாரர்களென் றால், குமாரத்திகளும். அவருடைய பரிசுத்தத்தில் பங்குள்ளவர்களாகும் பொருட்டு. வேதத்தை வாசித்து வேதத்திலிருந்து அறிவைப் பெற்றவுடன் நாம் அவருடைய பரிசுத்தத்தில் பங்குள்ளவர் களாகிவிடுவதில்லை.

பேதுரு ஓர் இடத்தில் அழகாக எழுதுகிறார்: "அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப் படும், அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப் பட்டு...." *(1 பேதுரு 1:7)*. *1* பேதுருவின் நிருபம் பாடுபடுகிற தேவனுடைய பிள்ளைகளுக்கு எழுதப் பட்ட நிருபம். உபத்திரவத்தில் இருக்கிற தேவனுடைய பிள்ளைகளுக்கு எழுதப்பட்ட கடிதம். தேவ னுடைய சுபாவம் நமக்குள் இருக்கிறது. ஆனால், நம்முடைய சுபாவமும் நமக்குள் இருக்கிறது. நம் முடைய வாழ்க்கையின் பல சூழ்நிலைகளில் நாம் யாரை வாழ்கிறோம்? "நான்" வாழ்கிறேன். எனவே, என்னுடைய பழைய சுபாவம் வெளிவருகிறது. யாரை வாழ்வதில்லை? கலாத்தியர் *2:20* இல் பவுல் சொன்னதுபோல கிறிஸ்துவை வாழ்வதில்லை. கிறிஸ்து இருக்கிறார். ஆனால், கிறிஸ் துவை வாழ்வதில்லை. ஆனால், பவுலோ கிறிஸ்துவை உடையவராக மட்டும் இருக்கவில்லை, கிறிஸ்துவை வாழ்ந்தார், கிறிஸ்துவை பெரிதாக்கிக் காண்பித்தார்.

ஆடிகளை வைத்துப் பார்க்கும்போது சிறிய எழுத்துக்கள் பெரிய எழுத்துக்களாகத் தெரிவதுபோல, பவுலைப் பார்க்கும்போது, பவுல்மூலம் கிறிஸ்து பெரிதாக்கிக் காண்பிக்கப்பட்டார். பவுல் ஒரு குழி ஆடியாக இருந்தார். நாமோ பல சமயங்களில் குவிஆடியாக இருக்கிறோம். நாம் கிறிஸ்துவைப் பெற்றதோடு நின்று விடுகிறோம். கிறிஸ்துவை வாழ்வதைப்பற்றியோ, கிறிஸ்துவைப் பெரிதாக்கிக் காண்பிப்பதைப்பற்றியோ பேசவே வேண்டாம். ஆனால், பவுலைப் பொறுத்தவரை கிறிஸ்து அவரில் வாழ்ந்தார். கிறிஸ்து அவருடைய எல்லாப் பகுதிகளையும் பிடித்தார். எனவே, வேத அறிவு அதற் குப் போதாது. சூழ்நிலைகள் அவருடைய சிட்சையிலே பிரிக்கமுடியாத ஒரு பகுதியாகும். சூழ் நிலைகள் அவருடைய பயிற்சியின் ஓர் அங்கமாகும். அவருடைய ஆவிக்குரிய பள்ளியிலே நம் முடைய சூழ்நிலைகள் இன்றியமையாத ஒரு பகுதியாகும்.

### சூழ்நிலைகள்வழியாக தேவன் பேசுகிறார்

நேரம் கிடைக்கும்போது "ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன்" என்ற புத்தகத்தைப் பொறுமையாக வாசித்துப் பார்க்க வேண்டும். சில சூழ்நிலைகள் நமக்கு மிக உபத்திர வத்தை, துன்பத்தை, துக்கத்தை, வேதனையைத் தரும். இதைத்தான் அவர், "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணப்படாமல் துக்கமாய்க் காணும்," என்று கூறுகிறார். தேவன் நம் மில் அன்புகூர்ந்ததாலே நம் வாழ்க்கையில் நமக்கு அப்படிப்பட்ட சூழ்நிலைகளை அமைக்கிறார். இந்தக் காரியத்தைக் குறித்து நாம் பலதடவை பேசியிருக்கிறோம். தேவன் ஒருவேளை நம் ஆவியில் பேசாமல் போகலாம். வேதத்தின்மூலம் பேசாமல் போகலாம். ஆனால், சூழ்நிலைகள்மூல மாக அவர் பேசுவதை நிறுத்துவதேயில்லை. *24* மணி நேரமும், *7* நாட்களும் அவர் பேசுகிறார். நம்முடைய எல்லாச் சூழ்நிலைகளிலும் நாம் தேவனுடைய சத்தத்தைக் கேட்க முடியும். சங்கீதக் காரன் தேவனுடைய சத்தத்தைக் கேட்டார். மலைகள் அதிரும்போது, "ஆ! இது தேவனுடைய சத்தம்," என்று அவன் கண்டுகொண்டான்.

ஜார்ஜ் வாஷிங்டன் என்ற புகழ்வாய்ந்த ஒரு தாவரவியல் விஞ்ஞானி அமெரிக்காவில் வாழ்ந்தார். மண்ணிலே காதை வைத்து, "இந்தச் செடி என்ன சத்தம் கொடுக்கிறது," என்று கேட்பாராம். தாவ

ரங்களிலிருந்து அவருக்கு சத்தம் கேட்குமாம். இது உண்மையா பொய்யா என்று எனக்குத் தெரியாது. இதை எதற்குச் சொல்லுகிறார்கள் என்றால் தாவரங்களைப்பற்றிய அவருடைய அறிவு, உணர்வு, அவ்வளவு நுட்பமாக இருந்ததாம். நீங்கள் எப்போதாவது தாவரங்களிலிருந்து வந்த சத்தத்தைக் கேட்டிருக்கிறீர்களா?

சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் நிறைய பறவைகள் இருக்கின்றன. ஆனால், சனிக்கிழமை மட்டும்தான் அவைகளுடைய சத்தத்தைக் கேட்க முடியும். "இந்தப் பறவைகள் சனிக்கிழமை மட்டும் ஏன் இவ்வளவு சத்தம் போடுகின்றன?" என்று நான் யோசித்துப்பார்த்தேன். ஏனென்றால், சனிக்கிழமை ஆள்நடமாட்டம் இல்லாததால் மனிதர்களுடைய சத்தம் இல்லை. எனவே, பறவைகள் போடும் சத்தம் கேட்கின்றன. அதுவும் விதவிதமான சத்தம் கேட்கின்றன. அதுபோல என்னுடைய கிராமத்திலே இருந்தபோது நிறைய நட்சத்திரங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால், சென்னைக்கு வந்தபிறகு நான் நிறைய நட்சத்திரங்களைப் பார்த்தது கிடையாது. இதற்கு 2 காரணங்கள். ஒன்று அதிக அலுவல் நிறைந்த வாழ்க்கை வாழ்கிறோம். இரண்டாவது இங்கு புகைமூட்டம் அதிகமாக இருக்கிறது.

நம் சூழ்நிலைகளில் 24 மணி நேரமும் தேவன் நம்மைச் சிட்சித்துக்கொண்டிருக்கிறார். தேவன் நம்மைப் பயிற்றுவிக்கிறார். ஏனென்றால், அவர் நம்மை நேசிக்கிறார். அவர் இந்தப் பிரபஞ்சத்தை சிருஷ்டித்து, மனிதனை உண்டாக்கி, மனிதனாக வந்து, இரத்தம் சிந்தி மரித்து, உயிர்த்தெழுந்து, ஏற்ற காலத்தில் நம்மை அவர் பக்கமாய் அழைத்த தேவன். இவ்வளவு செய்துவிட்டு அவருடைய நோக்கத்தை நிறைவேற்றாமல் அரைகுறையாக விடுவாரா? 24 மணி நேரமும் வேலை செய்து கொண்டிருக்கிறார். கார்களின் பின்னால் "Under ABT Care" என்று எழுதியிருப்பதைப் பார்த்திருக்கிறேன். உடனே, என் மனதில் இப்படித் தோன்றும்: "Under My heavenly Father's Care." ஆனால், எப்போதுமே நமக்கு சந்தோஷமாக இருப்பதில்லை.

அவர் வார்த்தையை வைத்து நம்முடன் பேச விரும்புகிறார். "என் வார்த்தையை நீ வெறுத்து அதை உன் முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட்டாய்." முதலாவது தேவன் தம் வார்த்தையைக்கொண்டு நமக்குக் கற்றுத்தருவார். ஆனால், அவருடைய வார்த்தையை முதுகுக்குப் பின்னாக எறியும்போது அவர் இப்போது எங்கேதான் போயாக வேண்டும்? அவர் இப்போது நம்மை சோதனைக் கூடத்துக்குத்தான் கொண்டுபோயாக வேண்டும். வகுப்பறையில் வைத்து வழிமுறைகளை ஆசிரியர் கற்றுத் தருகிறார். கற்றுத் தந்தபிறகு நம்மை சோதனைக்கூடத்துக்கு அழைத்துச்செல்கிறார்.

Chemistry labக்கு போகும்போதெல்லாம் எனக்கு மிகவும் பதற்றமாக இருக்கும். "Permanent Pale Pink colour வரும்வரை நீங்கள் சொட்டு சொட்டாக விட்டுக்கொண்டேயிருங்கள்," என்று சொல்வார்கள். எது Pale என்று எனக்குத் தெரியவே தெரியாது. பரீட்சை முடிந்ததும் மிகவும் விடுதலையாக இருந்தது. அப்பாடா! இனிமேல் Permanent Pale Pink colour சமாசாரமே கிடையாது! வெறுமனே வழிமுறையை மட்டும் படித்துக்கொண்டிருந்தால் ஏதாவது தெரியுமா? தெரியாது. சோதனைக் கூடத்துக்குக் கூட்டிக்கொண்டுபோய், "இப்போது பார்! ஒரு சொட்டு, இன்னொரு சொட்டு, இப்போது நிறுத்து. என்னவாயிற்று? Pale Pink colour வந்துவிட்டது."

எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணப்படாமல் துக்கமாய்க் காணும்.

"என்னுடன் வேலைபார்க்கிற இந்த நபரை என்னால் சகிக்க முடியவில்லை. என்னுடன் படிக்கிற இந்த நபரை என்னால் சகிக்க முடியவில்லை. இந்த ஆசிரியரை என்னால் சகிக்க முடியவில்லை. இந்தக் கொசுக்கடியை என்னால் சகிக்க முடியவில்லை," என்று மக்கள் புலம்புவதுண்டு. வேண்டும் என்று கொசுக்களெல்லாம் வந்து நம்மைக் கடிக்கட்டும் என்று நான் சொல்லவில்லை. கொசுக்கள் நம்மைக் கடிக்காமலிருக்க நாம் எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. கொசு இல்லாமல் இருக்கும் ஒரு சூழ்நிலையை நாம் பராமரிக்க வேண்டும். ஆனால், ஒரு கொசு கடித்துவிட்டால் "ஆ..கொசு..கொசு" என்று அலறுவது! "ஆகிலும் அதில் பழகினவர்களுக்குப் பிற்காலத்தில் நீதியாகிய சமாதான பலனைத் தரும்." ஆனால் கடைசியாக 1 நாள், 1 வாரம், 1 மாதம், 1 வருடம் ஏன் வாழ்நாள் முழுவதும்கூட இவர் கூடத்தான் நான் வேலை பார்க்க வேண்டும் என்று நீர் விரும்பினால் அவர்கூட நான் வேலை பார்க்கத் தயாராக இருக்கிறேன். உம் சித்தம் ஆகட்டும்." "என்னுடன் வேலைபார்ப்பவரை என்னால் நேசிக்க முடியவில்லை. ஆனால் நான் உம்மை நம்பியிருக்கிறேன். உம் ஜீவனை நம்பியிருக்கிறேன். உம் ஆவியானவரை நம்பியிருக்கிறேன்."

## தேவனுடைய தெய்வீக ஞானம்

நம் கட்டமைப்பு, மனப்போக்கு, பிறவிக்குணம் என்னவென்று தேவனுக்குத் தெரியும். எவ்வளவு சூடு, எவ்வளவு அழுத்தம் கொடுக்கலாம் என்று அவருக்கு மட்டும்தான் தெரியும். அந்த ஞானம் தெய்வீக ஞானம். முதலாம் ஆண்டு பொறியியல் படித்தபோது ஓர் இரும்புத் துண்டைக் கொடுத்து அதை "S வடிவத்தில் அடி" என்று சொன்னார்கள். அந்த இரும்பை உலையில் காட்டிக்கொண்டேயிருக்க வேண்டும். அதுதான் கஷ்டமான வேலை. சூடு குறையவைத்து அடித்தால் அது வளையாது. மதிப் பெண் குறைவாகப் போடுவார்கள். தேர்வில் தோற்றுவிடுவோம். சூடு அதிகமாகிவிட்டால் அது அப் படியே உருகிப்போய்விடும். ஓர் அடி அடிக்கிறதற்குள் அது அப்படியே சிதறிப்போய்விடும். சரி யான சூடு, சரியான அழுத்தம் கொடுத்து நாம் அடிக்கும்போது அது அழகாக வளையும். இதை தேவன்தான் செய்ய முடியும்.

"இந்தப் பிறவிக்குணம், இந்த மனப்போக்கு, இந்தக் கட்டமைப்பு உள்ள இந்த நபருக்கு என்ன சூழ்நிலைகள்மூலம் எவ்வளவு அழுத்தம், எவ்வளவு சூடு எத்தனை நாட்களுக்கு இருக்க வேண்டும்," என்று தேவன் தம் அநந்த ஞானத்தின்படி தீர்மானிக்கிறார். இதைத்தான் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில், "நம்மிடத்தில் நற்கிரியையைத் தொடங்கியவர் இயேசு கிறிஸ்துவின் நாள்பரி யந்தம் அதை நடத்துவார்," என்று கூறுகிறார். இது மட்டும் நம் சகோதர சகோதரிகளின் வாழ்க்கை யில் நடக்குமென்றால் நாம் மிகவும் சந்தோஷப்படுவோம். "இந்த வாரத்தில் அல்லது இந்த நாளில் இந்தச் சூழ்நிலையில் என்னால் பொறுக்கமுடியவில்லை. தேவனிடத்தில் திரும்பினேன்," என்ற நிலை ஏற்பட்டால் எவ்வளவு நலமாக இருக்கும்! பொறுக்க முடியாத சூழ்நிலையில் நாம் யாரிடத் தில் போக வேண்டும்" அப்பாவிடமோ, அம்மாவிடமோ, தலைமை ஆசிரியரிடமோ போகவேண்டாம். யாரிடம் போக வேண்டும்? தேவனிடத்தில் போக வேண்டும். அப்படித் திரும்புவதுதான் முதல் படி. ஒரு சூழ்நிலையைக் குறித்து நாம் தேவனிடம் போக ஆரம்பித்துவிட்டால் தேவன் உரையாடலை ஆரம்பித்துவிடுவார். நாம் தேவனிடம் பேச, தேவன் நம்மிடம் பேச... நம்முடைய பிறவிக்குணத்தில் அல்லது நம்முடைய கட்டமைப்பில் எந்த அம்சத்தில் தேவன் செயல்படுகிறாரோ அதில் அவர் ஒரு அறுவைசிகிச்சை மருத்துவரைவிட மிக நுணுக்கமாக, நுட்பமாக செயல்படுவார். நம்முடைய பல வீனங்கள் அவருக்குத் தெரியும். எனவே, மரத்துப்போகச் செய்யும் ஊசிபோட்டுத்தான் அறுவை சிகிச்சை செய்கிறார். மரத்துப்போகச் செய்யும் ஊசி போடாமல் தேவன் அறுவை சிகிச்சை செய் தால் நாம் ஒருவரும் தாங்கிக்கொள்ள மாட்டோம். எழுந்து ஓடிவிடுவோம். எனவே, அருமையான சகோதர சகோதரிகளே, எபிரெயர் 12:10-11; ரோமர் 8:14; 2 கொரிந்தியர் 3:18 ஆகிய பகுதிகளை வாசித்துப்பாருங்கள். தேவன் ஒரு சூழ்நிலையையும் வீணாக்குவதேயில்லை. நம்முடைய வாழ்க்கை யின் எந்தச் சூழ்நிலையையும் தேவன் வீணாக்குவதேயில்லை.

## தேவன் உண்மையுள்ளவர்

இன்னொன்றையும் நாம் நினைத்துப்பார்க்க வேண்டும். நாம் இளைப்பாறுதலோடு இருக்கலாம்; தேவன் வேலைசெய்துகொண்டிருக்கிறார். தேவன் தவறுசெய்வதேயில்லை. எனக்குத் துன்பமாக இருக்கிறது என்பதால் என்னுடைய முடிவு நான் அழிந்துவிடுவேன் என்பதல்ல. 1 பேதுருவை நாம் நன்றாக வாசித்துப் பார்க்கவேண்டும். யோபுவில் ஒரு வசனம் இருக்கிறது. "இம்மட்டும் வா, மிஞ்சி வராதே" (யோபு 38:11). 1 கொரிந்தியர் 10:13: "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்." தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார் என்றால் என்ன பொருள் தெரியுமா? அளவுக்கு அதிகமான சூடும் தருவதில்லை. அளவுக்குக் குறைவான சூடும் தருவதில்லை. நமக்கு எவ்வளவு தேவை என்று அவ ருக்கு மிக துல்லியமாகத் தெரியும். "உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பித் துக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்." அவர் போக்கை உண்டாக்குவார். ஆனால், அவர் Emergency Exit உண்டாக்கமாட்டார். 6 மணி நேரம் சிலுவையில் தொங்க வேண்டும் என்று தேவன் தீர்மானித்திருக்கிறார் என்றால், அதை 5 மணி நேரம் 45 நிமிடங்களாகக் குறைக்கும்படி நாம் தேவனிடம் பேரம் பேச முடியாது. அவருடைய நோக்கம் நிறைவேறுவதற்காக நாம் 3 நாட்கள் கல்லறையில் இருக்க வேண்டும் என்று தேவன் தீர்மானித்திருந்தால் அதை 2 நாட்களாகக் குறைக்க முடியாது. தேவன் தப்பித்துக்கொள்வதற்கான போக்கை உண்டாக்குகிறார். ஆனால், அவர் அவசரப் போக்கை உண்டாக்குவதில்லை. நாம் நம் மூளையைப் பயன்படுத்தி அவசரப் போக்கை உண்டாக்கினால், அதே பாடத்தைக் கற்றுக்கொள்வதற்கு தேவன் நம்மை மீண்டும் அதே வகுப்புக் குக் கொண்டுவருவார். நீங்கள் பாடத்தைத் தள்ளிப்போடலாம்; ஆனால், அதை நீங்கள் தவிர்க்கமுடி

யாது. இன்றைக்கு அதை நான் பள்ளிக்கூடத்தில் படிக்க விரும்பவில்லையென்றால், ஒருவேளை இன்னும் 20 வருடங்கள் கழித்து அதைப் படிக்கவேண்டியிருக்கும். எவ்வளவு சீக்கிரம் கற்றுக்கொள்கிறோமோ, அவ்வளவுக்கு அது நல்லது. தேவன் தப்பித்துக்கொள்வதற்கான போக்கை உண்டாக்குகிறார். ஒரு பாடத்தை நாம் கற்றுக்கொண்டால் போதும். அவர் சூழ்நிலையை மாற்றிவிடுவார். ஒருவேளை நான் ஆண்டவரிடம் இவ்வாறு புகார் செய்கிறேன் என்று வைத்துக்கொள்வோம்: "ஆண்டவரே, இவனோடு வேலை செய்யவே மனம் இல்லை. வேலைக்குப் போகவேண்டும் என்று நினைத்தாலே கஷ்டமாக இருக்கிறது." ஜெபிக்கிறேன். 1 நாள், 1 வாரம், 1 மாதம், 1 வருடம், பல வருடங்கள். ஆனால், சூழ்நிலை மாறவேயில்லை. மாறாது, ஏனென்றால், நான் கற்றுக்கொள்ள வேண்டிய பாடத்தை இன்னும் நான் கற்றுக்கொள்ளவில்லை. என்ன நோக்கத்திற்காகத் தேவன் இந்தச் சூழ்நிலையை வடிவமைத்தாரோ அந்த நோக்கம் இன்னும் நிறைவேறவில்லை.

அது ஒரு வியாதியாக இருக்கலாம். "ஆண்டவரே, அவருக்கு இரங்குகிறீரே, எனக்கு இரங்க மாட்டீரா? ஆண்டவரே, நான் செத்துவிடுவேன் போலிருக்கிறதே! நான் செத்துவிட்டால் என் பிள்ளைகளின் கதி என்ன?" எந்த மறுசாயலாகும் வேலையும் நடைபெறாது. ஏனென்றால், நாம் போடும் சத்தத்தில் அவருடைய சத்தம் கேட்காது. நம் சத்தம் நம்மிடமே திரும்பி வந்துவிடும். ஆனால், புலம்பினாலும்கூட, ஜெபிப்பது நல்லது. ஆசாப் ஜெபம் பண்ணியதுபோல. "அவன் நல்லாயிருக்கிறான். இவன் நல்லாயிருக்கிறான். நான் இப்படி இருக்கிறேனே!" (சங்கீதம் 71). "நான் நீதியிலே என் கைகளைக் கழுவி உம் பலிபீடத்தைச் சுற்றி வந்து என்ன பிரயோஜனம்? அவருடைய கண்கள் கொழுப்பினால் எடுப்பாயிருக்கிறது." அப்படியானால் என்ன பொருள்? "அவன் கொழுகொழுவென்று இருக்கிறான். என்னைப் பாரும். நான் எப்படி இருக்கிறேன்!" பரவாயில்லை. இப்படிப் புலம்புவது நல்லது. இப்படிப் புலம்பும்போதே பரிசுத்த ஆவியானவர் கொஞ்ச நேரத்தில் ஜெபத்தின் போக்கை மாற்றுவார். கொஞ்சநேரம் என்பது 1 நாளாக இருக்கலாம் அல்லது 1 வாரமாகக்கூட இருக்கலாம். கடைசியாக ஜெபத்தின் போக்கை மாற்றுவார். நாமும், "நான் என் அறியாமையினால் அப்படிச் சொன்னேன்," என்று கூறுவோம். "என் பலவீனத்தில் நான் இப்படிப் பேசினேன். ஆண்டவரே, நீரே என்னுடைய ஆரோக்கியம், நீரே என்னுடைய மருத்துவர், நீரே பிள்ளைகளைக் கொடுத்தவர், என் உயிர் உம்முடைய கரத்தில் இருக்கிறது." இப்படி ஜெபித்தவுடன் தேவன் சூழ்நிலையை மாற்றிவிடுவார். அவர் என்ன நினைப்பார்: இனி இந்த நோய்க்கு வேலை இல்லை. நோக்கம் நிறைவேறிவிட்டது.

தேவன் எப்போது யோபுவின் நிலையை மாற்றினார் தெரியுமா? அவன் நண்பர்களுக்காக ஜெபித்தபோது அவனுடைய சூழ்நிலையைக் கர்த்தர் மாற்றினார் என்று நாம் சொல்லுவோம். அது உண்மைதான். ஆனால், "நான் ஒரு மூடனைப்போல் பேசினேன். நான் பேசினதற்காக மனம் வருந்தி தூளிலும் சாம்பலிலும் உட்காருகிறேன். நான் பேசின 40 அதிகாரங்கள் அனைத்தும் புத்தியீனம்." தேவன் பார்க்கிறார்: அவன் கற்றுக்கொள்ள வேண்டிய பாடத்தைக் கற்றுக்கொண்டான், இப்போது அவனுடைய சூழ்நிலையை மாற்றுவோம். இதற்குமுன் நாமே நம் சகோதர சகோதரிகளுக்கு உதவ முன்வந்தால் அது வேலைசெய்யாது. நம் சகோதரன் அதிகமான பணக் கஷ்டத்தில் இருக்கிறான் என்று எண்ணி நீங்கள் எனக்கு உதவ முன்வருகிறீர்கள். ஆனால், கர்த்தர் ஏன் என்னை அந்தச் சூழ்நிலையில் வைத்திருக்கிறார் என்பதைக் கற்றுக்கொள்ளும் மனப்பாங்கு எனக்குள் இன்னும் உருவாகவில்லை. நீங்கள் எனக்கு 10,000 அல்லது 10 இலட்சம் தந்தாலும் என் பிரச்சினை தீராது. என் துன்பத்திலிருந்து என்னால் விடுதலை பெற முடியாது. இதற்கு அர்த்தம் பிரச்சினையில் இருக்கும் சகோதரனுக்கு உதவக்கூடாது என்பதல்ல அல்லது அவன் துன்பப்படும்போது "என்ன பாவம் பண்ணினானோ, அதனால் கர்த்தர் அனுமதித்திருக்கிறார்!" என்று நாம் எண்ணக்கூடாது. சிட்சை பாவத்துக்காக அல்ல. சிட்சை அவருடைய பரிசுத்தத்தில் பங்குபெறுவதற்காக, யார் துன்பப் பட்டாலும், நாம் உடனே என்னதான் நினைப்போம்: "அவன் என்ன பாவம் பண்ணினானோ! யாரிடம் கொள்ளையடித்தானோ!" கொள்ளையடிக்காவிட்டாலுங்கூட நாம் பண நெருக்கடியின் மூலமாகப் போகலாம். ஏனெனில் அவன் பணமின்மையைப் பெருந்துன்பமாகவும், பண நிறைவை பெரிய இன்பமாகவும் கருதக்கூடிய நபராக இருக்கக்கூடும். அந்தப் பிறவிக்குணத்தை இப்போது அவர் கொஞ்சம் அறுவை சிகிச்சை செய்யவேண்டும். எனவே, 1 கொரிந்தியர் 10:13யை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவருடைய வேலை முடிந்துவிட்டால் அவர் ஒரு நிமிடங்கூடத் தாமதிக்கமாட்டார்.

1 பேதுரு 5:5-7: "அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள், நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள், பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ தேவன் கிருபை அளிக்கிறார். ஆகையால்,

ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கி யிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.” இந்த வசனங்களை பலகையில் மாட்டி வைப்பது எளிது. ஆனால், அதன் இட அமைப்பைப் பார்க்க வேண்டும். இங்கு தேவனுடைய பிள்ளைகள் மிகவும் துன்பப்பட்டுக்கொண் டிருக்கிறார்கள். பேதுரு என்ன சொல்கிறார்.? “நீங்கள் தேவனுடைய பலத்த கரத்துக்குள் அடங்கி யிருங்கள்.” நான் தேவனுடைய பிள்ளை. என்னுடைய வாழ்க்கையின் விவரங்களை ஒழுங்காக்கும் பொறுப்பை அவர் சாத்தானிடம் ஒப்படைக்கமாட்டார். அவர் முழு அதிகாரத்தையும் சாத்தானுக்கு வழங்குவதில்லை. சாத்தான் யோபுவை சோதிக்க வருவதற்குமுன் தேவன் இப்படிச் சொல்லுகிறார்: “நீ போ, அவனைத் தொடலாம். ஆனால், அவனுடைய உயிர்மேல் உனக்கு எந்த அதிகாரமும் கிடையாது.” உடம்பெல்லாம் புண்ணானவுடனே நாம் சொல்லுவோம்: இன்னும் ஒரு மாதத்தில் நான் செத்துப்போவேன். உடம்பெல்லாம் புண்ணாவதற்கு தேவன் அனுமதிக்கக்கூடும். ஆனால், உயிரைத் தொடுவதற்கு தேவன் அனுமதிப்பதில்லை. எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. என்ன செய்ய வேண்டும்? அவருடைய பலத்த கரத்துக்குள் அடங்கியிருங்கள். எதுவரைக்கும்? அவர் நம்மை உயர்த்தும்வரைக்கும். உயர்த்துதல் என்றால் நம்மைக் கோடீஸ்வரராக்குவது இல்லை. ஒரேவொரு உயர்வுதான் உண்டு. அது அவருடைய பரிசுத்தத்தில் பங்குபெறுவது. இதுதான் பெரிய உயர்வு. அடங்கியிருங்கள். அவர் உங்களை உயர்த்துவார். நீங்கள் என்ன செய்ய வேண்டும்? அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், அவர் உங்கள்மேல் தொடர்ந்து கரிசனைப்படுகிறார். 24/7 கரிசனை. உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். அவருடைய கரம் உன்மேல் இருக்கிறது. அவர் தொடர்ந்து உன்மேல் அக்கறைப்படுகிறார். இந்தப் பிறவிக்குணத்தில் அவருடைய நோக்கம் நிறைவேறியவுடன் அவர் உன்னை உயர்த்துவார். ஆமென்.